Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| | |
|---|---|
| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |

வேணு : 17 | ஜூலை 2012 | கானம் : 12



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

Related Websites : www.namadwaar.org Email:contact@namadwaar.org

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ.120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை




வேணு : 17 | ஜூலை 2012 | கானம் : 12

Delivered by India Post







மே 23 – ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் சென்னை பாரதிதாசன் காலனி
ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்



June 19 - Mahamantra Mass Prayer for Students by Bhagyanathanji -
Castlefield School - Malaysia









ஜூன் 10 – மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை –
– பாக்யநாதன்ஜி – ஸோமா ஹால்,
கோலாலம்பூர், மலேசியா










ஜூன் 1-3 - சிங்கப்பூர் "மதுரஉத்ஸவம்" - "கலிதர்ம உத்தியார்" உபன்யாசம்
- பாக்யநாதன்ஜி & கோபகுடீர குழந்தைகளின் நிகழ்ச்சிகள்



Lecture on Personal Effectiveness by GOD India Trust Speaker Ramanujamji at the Jawaharlal Nehru Institute of Banking and Finance for young bankers on June 22, 2012 / Hyderabad, A.P





ஜூன் 9 - மஹாமந்த்ர கூட்டு பிரார்த்தனை - ராமானுஜஜி
- விருதுநகர் சொக்கநாதர் திருக்கோயில்

ஜூன் 10 - சிவகாசியில் புதிய நாமத்வார் திறப்பு விழா



ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

**வேணு:17** **ஜுலை 2012** **கானம்:12**

## ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
## ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-196 | 3 | சனாதன புதிர் | 20 |
| மதுர யாத்திரை | 8 | ஒரு கனவு | 27 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 11 | ஆலய தரிசனம் | 29 |
| | | பாலகர்களுக்கு ஒரு கதை | 32 |
| பாகவத பழம் -28 | 13 | ப்ருந்தாவன கண்ணன் | 38 |
| கவனத்தில் கொள்வோம் | 17 | மாலே மணிவண்ணா | 40 |
| இங்கிலாந்தில் "வைர" விழா | 18 | அப்பாலுக்கு அப்பால் | 42 |


பொலிகபொலிகபொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டு கொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப்புகுந்து இசைபாடி ஆடியுழிதரக்கண்டோம்

கடல்வண்ணனான நாராயணனின் அடியார்கள், கலியுகத்தில் பெருமளவில் அவதரித்து, பகவானின் நாமங்களை பாடி, ஆடி, கொண்டாட போகிறார்கள். அதனால், சகல உயிர்களின் அனுபவித்தே தீர வேண்டிய பாபங்களும் நாசமாகி விட போகிறது. பாவங்களை அனுபவிக்க உயிர்கள் இல்லாது போவதால், நரகமும் நலிவடையும். யமனுக்கும் வேலை இல்லாமல் போய்விடும். கலி புருஷனும் தொலைவான். கலியுகத்தின் போக்கும் தொலையும். இதில் சந்தேகமே இல்லை.

– நம்மாழ்வார் – திருவாய்மொழி –3352

# ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் : ஸிந்துபைரவி தாளம் : ஆதி

பல்லவி

நாகரிக ஸ்ரீநிவாசன் – நவ
நாகரிக ஸ்ரீநிவாசன் – மஹாரண்யவாஸன்

(நாகரிக ...)

சரணங்கள்

மன்மதனும் இவனே மன்மத ஜனகனும் இவனே
காண்பவனும் இவனே காணும் காட்சியெல்லாம் இவனே

(நாகரிக ...)

மும்மூர்த்திகளுக்கும் முதல்வன் இவனே
முக்கண்ணன் வழிபடும் தெய்வமும் இவனே

(நாகரிக ...)

முத்தீ ஓம்புவர் தெய்வமும் இவனே
முக்காலும் முரளீதரன் வழிபடும் தெய்வம் இவனே

(நாகரிக ...)

முன் அட்டை: இங்கிலாந்தில் "அஷ்டதள பூக்கொண்டு" பூஜை – பார்க்க பக்கம் 18
பின் அட்டை: மலேசிய நாமத்வாரில் ஸ்ரீப்ரேமிகவரதன் சன்னதியில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் "கலிதர்ம உந்தியார்" உபன்யாசம் – பாக்யநாதன்ஜி



# மதுரமான மஹனீயர் - 196

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

சென்னை ப்ரேமிகபவன ஸத்ஸங்கங்களுக்கு அடிக்கடி வருவோர், திரு.பிரேமை நிச்சயம் அறிந்திருப்பர். மஹாமந்திர நாமகீர்த்தனத்தை மிகவும் ஆசையுடனும், அழகாகவும் பிரேமிக பவனத்தில் செய்து கொண்டிருப்பார். தவிரவும் குருநாதர் மேல் அலாதி பிரியம் கொண்டவர். "இன்று நான் இருக்கிறேன் என்றால் அதற்கு குருநாதரை தவிர வேறு காரணமில்லை. இதை நான் ஆழம் புரிந்து சொல்கிறேனோ இல்லையோ அதுதான் உண்மை" என்று ப்ரேம் அடிக்கடி சொல்வதுண்டு. இவருக்கு எதிர்பாராத விதமாக ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது. அதில் இருந்து அவர் குருநாதரின் அருளால் மீண்டு வந்தது குறித்துதான், இங்கு பார்க்க போகிறோம்.



கடந்த வருடம் (2011) ஜூலை முதல் தேதி அன்று காலை வழக்கம் போல், பிரேமிக பவனம் வந்து குருநாதரை சேவித்து விட்டு, ப்ரேம், மோட்டார் சைக்கிளில், அலுவலகம் சென்று கொண்டிருந்தார். அவர் கிண்டி அண்ணா பல்கலைக் கழகம் வழியாகத்தான் செல்ல வேண்டும். பல்கலைக்கழக வாசலில் நெரிசலான டிராபிக்கில், ப்ரேமுக்கு ஏற்பட்ட விபத்தில், பேருந்து ஒன்று அவர் கால் மீது ஏறி விட்டது. பஸ் நின்ற பின் ப்ரேம் காலை எடுக்க முயற்சி செய்ய, அது டயரின் அடியில் மாட்டி இருந்திருக்கிறது. பயணிகள் பஸ்ஸை தூக்க 2-3 முறை முயற்சி செய்து முடியாமல், பஸ்ஸை அவர்கள் ரிவர்சில் தள்ள, பிறகே கால் வெளியில் வந்தது.

பிறகு பார்த்தால் ப்ரேமின் இடது துடை கிழிந்து இருந்தது. வயிறு, கை இவற்றில் தோல் இல்லை. அணிந்திருந்த ஹெல்மெட், ஐ.டி. கார்டு, எதுவும் காணவில்லை. ஆடைகள் அனைத்தும் கிழிந்து விட்டிருந்தது. பைக் நசுங்கி இருந்தது.

இந்த நிலையில் அவரிடம் ஒருவர் வந்து "உங்கள் மொபைல்" என்று கொடுத்து விட்டு சென்றார்.

ப்ரேமுக்கு சொந்த பந்தங்கள் யாரும் சென்னையில் இல்லை. அவர் தந்தையோ திருமலையில் இருக்கிறார். தாய் சில வருடங்களுக்கு முன், இறைவனடி சேர்ந்து விட்டார். அவர் மனத்தில் குருநாதர்தான் உடனே தோன்றி இருக்கிறார். அவர் தனது இடது கையால் மொபைலை அழுத்தி, பிரேமிக பவனம் திரு.கிரியிடம் 'எனக்கு விபத்து நேர்ந்து விட்டது. குருநாதரிடம் ஒரு வார்த்தை சொல்லி விடுங்கள்" என்றிருக்கிறார். இதற்கிடையில் "குருநாதா, குருநாதா" என்று திரும்ப திரும்ப சொல்லி கொண்டே இருந்திருக்கிறார்.

அப்பொழுது நான் ப்ரேமிக பவனத்தில்தான் இருந்தேன். ஸ்ரீஸ்வாமிஜியிடம் உடனடியாக தெரியப்படுத்தினேன். ப்ரேமின் மொபைல் மூலமாக, அங்கு வந்திருந்த ஆம்புலன்ஸ் ஊழியர்களிடம் தொடர்பு கொண்டு பேசி, அவர்கள் உத்தேசம் என்ன என்பதையும் அறிந்து கொண்டேன். அவர்கள் ப்ரேமை ஏதோ ஒரு அரசு ஆஸ்பத்திரியிலோ அல்லது அருகிலுள்ள தனியார் ஆஸ்பத்திரியிலோ சேர்க்கமுடியும் என்றனர்.

நமது சத்சங்க அன்பர், திரு.அருணாசலம் அடையார் அருகிலுள்ளார். நான் அவரை தொடர்பு கொண்டு, ப்ரேமுக்கு நடந்த விபத்து பற்றி சொல்லி, உதவி செய்யுமாறு கேட்டு கொண்டேன். அவர் உடனே, தனக்கு இருந்த அனைத்து வேலைகளையும் விட்டு விட்டு, ப்ரேமை பார்க்க விரைந்து சென்றார். ப்ரேமை ஆஸ்பத்திரிக்கு கூட்டி செல்கையில் அவர், ப்ரேமிடம் "நான் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பக்தன்தான். நான் பாக்யநாதன் சொல்லி வந்திருக்கிறேன். கவலைப்படாதீர்கள். உங்களை சேர்க்க போகும் மருத்துவமனை எனக்கு நன்கு அறிமுகமானது. கவலைப்பட வேண்டாம்" என்று சொல்லி தைரியமூட்டி இருக்கிறார்.

பல மருத்துவர்கள் ப்ரேமுக்கு சிகிச்சை செய்கையில் "முதலில் கால் பிழைப்பதே அரிது. அது குணமாகிறதா என்று பார்ப்போம். பின்னர் நடக்க முடிகிறதா என்று பார்ப்போம். எதையும் நிச்சயமாக கூற முடியாது" என்றுதான் சொல்லி

இருக்கின்றனர். அவர்கள் கூறியபடி அது அப்பேர்ப்பட்ட விபத்துதான். சென்னையில் Peak Hour சமயத்தில் முழு லோடில் வந்திருக்கும் ஒரு பேருந்து, ஒருவர் கால் மேல் ஏறுமானால், அப்புறம் அதை என்னவென்று சொல்வது? பிழைப்பது அரிதுதானே! அப்படி இருந்தாலும் ஊனமில்லாமல் இருக்க வேண்டும். சகஜமாக திரும்ப முடியுமா? அதுவே சாத்தியமானாலும் எத்தனை வருடங்களாகுமோ? வாழ்க்கை காத்திருக்காதே! இதைத்தான் மருத்துவர்கள் தங்கள் பாஷையில் சொல்லி இருக்கின்றனர். அது முழுக்க முழுக்க சரி. ஆனால் நடந்ததென்னவோ, அதிசயத்திலும் அதிசயம்.

அவரை ஆஸ்பத்திரியில் ஸ்டெரெச்சரில் அழைத்து வரும்பொழுது, அவரை சுற்றி பத்து அல்லது பதினைந்து பேர் இருந்தார்கள். அனைவரும் குருநாதரின் பக்தர்கள். சத்சங்க அன்பர்கள் எல்லோரும் ஒரு குடும்பம் என்று அது சொல்லாமல் சொல்லியது. அந்த அன்பர்கள் யாரும் ப்ரேமுக்கு சொந்தமில்லை. ஆனால் அந்த அன்பர்கள் பூரண ஈடுபாட்டுடன், ப்ரேமுக்கு செய்த சேவை குருநாதர், அந்த அன்பர்களிடம் எத்தகைய அன்புள்ளத்தையும், சகோதரத்துவத்தையும் பயிரிட்டு இருக்கிறார் என்று காட்டியது.

குருநாதரிடம் எந்த ஒரு விஷயத்திற்காக பிரார்த்தித்தாலும், அதற்கு அனுக்ரஹிப்பதோடு நின்று விட மாட்டார். தனக்கு எவ்வளவு காரியங்கள் இருந்தாலும், அதன் நடுவிலும் அந்த அன்பரிடம் ப்ரத்யேக அக்கறை காட்டி விசாரிப்பார். உண்மையில் இந்த விசாரிப்பிலேயே அந்த கஷ்டத்தின் தாக்கம் பெருமளவில் விலகி விடும். இது ஒவ்வொரு சத்சங்க அன்பரின் அனுபவம்தான் என்பதை மறுக்க முடியாது. உண்மையில் குருநாதருக்கு இருக்கும் பூஜை, உபன்யாசங்கள், பாராயணங்கள், க்ஷேத்ர விஜயம், பிரார்த்தனை கூட்டங்கள், புதுப்புது அன்பர்களின் தொடர்ந்த வருகை, ஆஸ்ரம பணிகள், உத்ஸவங்கள், கோவில் திருப்பணிகள் என்ற பற்பல பணிகளுக்கு இடையில் இதற்கு அவர் எப்படி காலத்தை ஒதுக்குகிறார் என்றே புரியாது. ஆனாலும் எப்படியாவது சம்பந்தப்பட்ட அன்பருடன்

அவர் தொடர்பு கொண்டு அவரை அனுக்ரஹிப்பார். இதை அவரவர் அனுபவமே நன்கு விவரிக்கும்.

ப்ரேமின் விஷயத்திலும் அப்படித்தான் நடந்தது. அடிக்கடி வந்து ப்ரேமை பார்த்து விட்டு போவார். "எப்படி இருக்கிறாய்?" என்று பக்கத்தில் அமர்ந்து விசாரிப்பார். தான் மட்டுமின்றி பல பக்தர்களை பார்த்து விட்டு வரவும் சொல்வார். ஆஸ்பத்திரியில் நல்ல ட்ரீட்மெண்ட் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்ய சொல்வார். அன்பின் வெள்ளத்தில் ப்ரேம் இருந்தார்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வந்த பிறகு குருநாதரே ப்ரேமை பார்க்க வந்து அருகிலமர்ந்து மஹாமந்திர கீர்த்தனம் செய்தார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் அவர் தரிசனத்திற்காக காத்திருக்க "இன்று கோகுலாஷ்டமி. பிரேம் என்னை பார்க்க ஆசைப்படுவான்" என்று சொல்லி முதலில் ப்ரேமைத்தான் பார்க்க சென்றார். பிசியோதெரபி சிகிச்சை, உதவிக்கு நர்ஸ், ஊட்டச்சத்து மிக்க உணவு, இதமான படுக்கை என சகலத்தையும் ஸ்ரீஸ்வாமிஜியே ப்ரேமுக்காக பார்த்து பார்த்து ஏற்பாடுகள் செய்தார்.

தன் முன் யார் அமர்ந்திருந்தாலும் "ப்ரேம் தனியாக இருப்பான். போ, அவனை பார்த்து வா; கொஞ்சம் அவனருகே இருந்து மஹாமந்திர கீர்த்தனம் செய்து விட்டு வா" என்று, தினமும் நிறைய பக்தர்களை அனுப்புவார். மருத்துவர்கள் ப்ரேமிற்கு குணமாவதற்கு மூன்று அல்லது நான்கு வருடங்கள் ஆகும் என்று சொல்ல, நான்கு மாதங்களில் நடக்க, உட்கார வைத்து விட்டார் ஸ்ரீஸ்வாமிஜி. இன்று எல்லோரையும் போல் ப்ரேமால் நடக்க, உட்கார முடிகிறது. இது எல்லாவற்றிற்கும் மேலாக எந்த ஒரு விதமான நிரந்தர பாதிப்பும் அவர் உடலில் இல்லை. உங்களுக்கு புரிகிறதா இதன் ஆழம்!

"அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான்" என்று பாசுரத்தில் வருகிறதே! அதன் அர்த்தம் இதுவோ என்று ப்ரேம் இன்று சொல்கிறார்! முழுக்க முழுக்க குருநாதரின் கிருபையினால் மட்டுமே இது சாத்தியம் என்று அவர் அறிந்து இருக்கிறார்!

குருநாதர் அவருக்கு செய்த கிருபையை வார்த்தைகளால் சொல்ல முடியாது. "என்றென்றும் குருநாதரின் திருவடியில் நன்றி மாறா உண்மையான பக்தி இருக்க பிரார்த்தனை செய்கின்றேன்" என்று ப்ரேம் சொல்வதை என்னால் நன்கு உணர முடிகிறது.



ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தகப்பனார் ஸ்ரீராஜகோபாலய்யர் அவர்கள், கடந்த மே 29, (29/5/2012) செவ்வாய்க்கிழமை, உத்தராயணம் நந்தன வருடம், வைகாசி மாதம், சுக்ல பக்ஷம், நவமி திதி, பூர நட்சத்திரம் கூடிய தினத்தில் பரமபதம் அடைந்தார் என்பதை "மதுரமுரளி" தெரிவித்து கொள்கிறது.

இப்படிக்கு

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

Personal Secretary to Sri Sri Swamiji

சாத்வீக குணம் படைத்த பண்பாளியான ஒருவர் தன்னை எந்த ஒரு விஷயத்திலும் முன்னிலைப்படுத்தி கொள்ள மாட்டார். எப்பொழுதும் தம்மை தாழ்த்தி கொண்டும், தம்மை ஒளித்து கொண்டும் இருந்து விடுவார். அது போலவே சாத்வீக குணமும் மனதின் ஆழத்தில் ஒளிந்து கொண்டு, வெளி வர மறுக்கிறது. தன்னை வெளிப்படுத்தி கொள்ள அதற்கு ஆசையில்லை. தமோ, ரஜோ குணங்கள் முழுவதும் வெளிப்பட்ட பின்னர் கடைசியாகத்தான் சாத்வீக குணம் வெளிப்படும்.

– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# விருத்திம் கர்நாடகே கதா - 6

—ராமானுஜம்ஜி

மஹான்கள் எப்பொழுதும் "சாஸ்திரம் இப்படி சொல்கிறது. மகரிஷிகள் இப்படி சொல்கிறார்கள். வேதம் இப்படி சொல்கிறது. பகவான் இப்படி சொல்கிறான்" என்றுதான் சொல்வார்கள். பாகவதத்தில் கூட நாரதர் வசுதேவருக்கு உபதேசிக்கையில் "இப்படித்தான் நவயோகிகள் சொல்கின்றனர்" என்கிறார். ஸ்ரீஆதிசங்கரர் ஆகட்டும், பகவத் ராமானுஜர் ஆகட்டும் அல்லது எந்த சம்பிரதாயத்தை சேர்ந்த பெரிய ஆச்சார்யர்களாகட்டும் இப்படியே உபதேசிப்பதை பார்க்க முடிகிறது. மஹான்கள், "நான் சொல்வதை கேள்" என்று சொன்னால் கேட்காமல் இருப்போமா என்ன? ஆனாலும் மஹான்கள், நமது சனாதன தர்மத்தின் மேலுள்ள மிகுந்த ஈடுபாட்டினாலும், இயற்கையான பணிவினாலும் அப்படி பேசுகிறார்கள் அல்லவா? ஸ்ரீஸ்வாமிஜியும் அப்படியே ஸ்ரீஸ்ரீதர ஸ்வாமி அவர்களின் வாழ்விலிருந்து ஒரு சம்பவத்தை சொல்லி "சாதனையும் அதன் பலனும்" என்பது குறித்து அழகாக உபதேசித்தார்கள். அதை இங்கு பார்ப்போம்.

சஜ்ஜன்காட்டில் ஸ்ரீதரஸ்வாமி தம் குரு சமர்த்தருக்கு சேவை செய்து கொண்டிருந்த காலம். அவர் எப்படி சேவை செய்வார் என்பதை சென்ற இதழிலேயே பார்த்தோம். அப்படி ஒருநாள் அவர் சேவை செய்து கொண்டிருக்கையில், ஒரு போஸ்ட்மாஸ்டர் அங்கு வந்தார். அவர் சமர்த்தரின் பக்தர். அவரை பார்த்தால் மிகவும் வருத்தத்திலும், கோபத்திலும் இருப்பதாகவும், ஏமாற்றம் அடைந்தவராகவும், தோற்றம் அளித்தார். 13கோடி ராம நாமம் ஜபித்தவர் முன் ராமன் தோன்றுவான் என்று சமர்த்தர் சொல்லி இருக்கிறார். அதன்படி அவர் பதிமூன்று கோடி ராம நாம மந்திரத்தை ஜபித்திருந்தார். அந்த போஸ்ட்மாஸ்டர், சமர்த்தரின் சன்னதியை பார்த்து, சமர்த்தர் மேல் கோபமாக ஏதேதோ பேச தொடங்கினார். ராம தரிசனம் கிடைக்கவில்லை என்பது குறித்தே அவர் பேசுகிறார்

என்பது தெளிவாக இருந்தது. மிகவும் சப்தமாக அவர் அப்படி பேசியது, ஸ்ரீதர ஸ்வாமியின் காதில் விழுந்தது. குருவின் மேல் அவதூறாக பேசியது அவருக்கு சிறிதும் பிடிக்கவில்லை.

சட்டென போஸ்ட் மாஸ்டரின் பக்கம் திரும்பி "குருநாதர் சொன்னபடி பதிமூன்று கோடி ஜபம் செய்தவர் முன் ராமன் தோன்றுவது சர்வ நிச்சயம். அதில் மாற்றமே இல்லை" என்றார். இதை ஸ்ரீதரஸ்வாமி சொன்ன மறுகணம் அந்த போஸ்ட் மாஸ்டர், ஒரு கணக்கு புத்தகத்தை முன்னே எடுத்து போட்டார். அதில் அவர் 13கோடி ஜபம் செய்ததற்கு கணக்கு இருந்தது. அவர் பொய் சொல்லவில்லை; உண்மையாக ஜபம் செய்திருக்கிறார் என்பது தெரிந்தது.

ஸ்ரீதரஸ்வாமி அமைதியாக போஸ்ட்மாஸ்டரை பார்த்து "நீங்கள் பதிமூன்று கோடி ஜபம் செய்ததும் உண்மை. குரு சமர்த்தர் சொல்வதும் உண்மை. இரண்டும் பொய் இல்லை" என்றார். இதை கேட்டு திடுக்கிட்டு போனார் போஸ்ட்மாஸ்டர். அது எப்படி இரண்டும் சரியாகும் என்று அவர் வினவினார்.

பதிலாக ஸ்ரீதர ஸ்வாமி "உமது மனைவி ஒருமுறை கடுமையாக நோய்வாய்ப்பட்டாள் அல்லவா? அவளால் படுக்கையில் இருந்தும் எழுந்திருக்க முடியாமல் போனபொழுது நீர் சமர்த்தரிடம் "நான் செய்த சகல புண்ய செயல்களையும் அர்ப்பணிக்கிறேன். என் மனைவி குணமடைய வேண்டும்" என்று பிரார்த்தித்தீர் அல்லவா? நீர் வீடு திரும்புகையில் உங்கள் மனைவி உங்களை வழக்கம் போல் ஜலபாத்திரத்துடனும் புன்னகையுடனும் வரவேற்றாளே?"

"அது மட்டுமல்லாமல் உமது பெண்ணிற்கு சரியான வரன் கிடைக்கவே இல்லை. எவ்வளவு முயற்சித்தும் அவள் கல்யாணம் நடைபெறாமலே இருக்கவே நீர் மிகவும் வருத்தம் அடைந்தீர். அப்பொழுதும் நீர் சமர்த்தரிடம் பிரர்த்தித்தீர். குரு உமது பெண்ணிற்கு எதிர்பார்த்ததற்கும் மேலான, அருமையான வரன் கிடைக்க அருளினார் அல்லவா?"

"இது மட்டுமில்லை. உமது பையன் பரீக்ஷைகளில் தேறவே இல்லை. மும்முறை அவன் தவறவே, நீர் அதற்கும் மிகவும் உருக்கமுடன் குரு சமர்த்தரிடம் பிரார்த்தனை செய்தீர். அதன் பின் அவன் நன்கு தேறினான் என்பது உமக்கே தெரியும்."

*ஸ்ரீதரஸ்வாமி அமைதியாக "நீங்கள் பதிமூன்று கோடி ஜபம் செய்ததும் உண்மை. குரு சமர்த்தர் சொல்வதும் உண்மை. இரண்டும் பொய் இல்லை" என்றார்.*

"மேற்கண்ட மாதிரி பிரார்த்தனை செய்ததினால் உமது கணக்கில் இப்பொழுது ஒன்பதரை கோடி ராம நாமம்தான் இருக்கிறது. இப்பொழுதும் நீர் பதிமூன்று கோடி ஜபித்தால் ராம தரிசனம் பெறுவது நிச்சயம்தான்" என்றார் ஸ்ரீதரஸ்வாமி.

இதையெல்லாம் கேட்ட அந்த போஸ்ட்மாஸ்டர் தனது செயலுக்கு வருந்தி, ஸ்ரீதரஸ்வாமியை வணங்கி சென்றார். பின்னாளில் அவர் குரு சமர்த்தரின் அருளால் ராம தரிசனமும் பெற்றார்.

"குறித்த பலனை கோரி செய்யும் பிரார்த்தனைகள் பலனை தருகின்றன. பலனில் சிறிதும் நோக்கமில்லாமல், பகவத் தரிசனத்திற்காகவே செய்யப்படும், அந்த பிரார்த்தனைகள் பகவத் தரிசனத்தை பெற்று தரும்".

இதையெல்லாம் ஸ்ரீஸ்வாமிஜி சொல்லி விட்டு மிகவும் நேர்த்தியாக "பதிமூன்று கோடி ஜபம் செய்தால் ராமன் தரிசனம் தருவான் என்று சொல்லவில்லை. ராமனின் தரிசனத்திற்கு ஆசைப்பட்டால், பதிமூன்று கோடி ராம நாம ஜபம் செய் என்றுதான் சொல்லி இருக்கிறது" என்றார்.

அன்பர்களே! மறுபடி மறுபடி நம் குருநாதர் இப்படி சொன்னதை சிந்தித்து பாருங்கள். என்ன ஒரு ஆழ்ந்த கருத்து இதில் அடங்கி இருக்கிறது! மிக எளிமையாக ஒரு சம்பவத்தின் மூலம் நமக்கு உணர்த்தி விட்டாரே!

(மதுர யாத்திரை தொடரும்)



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: இயந்திரம் போல், மெக்கானிக்கலாக மஹாமந்திரத்தை சொல்வது எப்படி ஒருவர் ஆன்மாவை உணர வழிவகுக்கும்? மனதில் ஞாபகம் வைத்து கொண்டு, கவனமுடன் கீர்த்தனம் செய்வது என்றாலோ, மனது இருக்கிறது என்றுதானே அர்த்தம். ஆனால் மஹாத்மாக்கள், ஆன்மாவை உணர மனதற்று இருக்க வேண்டும் என்கின்றனரே. இது குழப்பமாக இருக்கிறதே!

பதில்: அது சரி! மஹாத்மாக்கள் பேசுகின்றனரே! பேசுவதற்கு மனம் அவசியம்தானே? அப்படியெனில் மஹாத்மாக்கள் பேசுவதால், அவர்கள் மஹாத்மாக்கள் இல்லை என்று ஆக முடியுமா? ஒரு உண்மையான மஹாத்மாவின் உபதேசங்களை படித்ததினால், உங்களுக்கு இந்த குழப்பம் எனில், அவர் சொல்வதை நீங்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்.

புத்தகங்களை படிக்கையில், அதில் உள்ள விஷயங்களை பற்றிய அர்த்தம் அல்லது சந்தேகம் மனதில் தோன்றுகிறது அல்லவா? அப்படியே கீர்த்தனம் செய்வதும், மனதில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. கீர்த்தனம் செய்வது, மனதின் வேரை அழித்து விடும். மனது அழிவதுதான் முக்கியம். இயந்திரம் போல், சொல்வதுதான் ஆரம்பம். அது கொஞ்சம் கொஞ்சமாக மனோ ஜபமாக மாறும். இதுவே ஒருமுகப்பட்ட மனதில் கொண்டு விடும். அது மனதின் மூலமான ஆன்மாவை உணர செய்து விடும்.

பல மஹாத்மாக்கள், மஹாமந்திரத்தை மட்டும் ஜபித்தே கடவுளை அடைந்துள்ளனர். கடவுளை அடைய எண்ணிலடங்கா வழிகள் உள்ளன. சைபர் என்றும் இன்பினிட்டி (Infinity) என்றும் சொல்வது ஒரே விஷயத்தின் வேறு வேறு கோணப்பார்வைதானே!

அப்படித்தான் ரமணர், ஜே.கே., யோகிராம்சுரத்குமார் போன்ற ஞானிகள், ஒரே உண்மையை பல்வேறு கோணங்களில்

இருந்து சொல்கின்றனர் என்று புரிந்து கொள்ளுங்கள். யோகிராம்சுரத்குமார் கீர்த்தனம் செய்வது மட்டுமே, ஆன்மாவை அடைய போதுமானது என்கிறார். ஆரம்பத்தில் இயந்திரம் போல, நாமகீர்த்தனம் மெக்கானிக்கலாக இருந்தால் கூட, சாதாரண மக்களுக்கு, இதனினும் சுலப வழி கிடையவே கிடையாது.

கேள்வி: எவ்வளவு காலம் மஹாமந்திரத்தை ஜபித்தால் மனம் அமைதியுறும்?
பதில்: காலமோ, அளவோ விட, தீவிரத்துடனும் ஒருமுகத்துடனும் சொல்வதுதான் முக்கியம்.

நாம், அடிக்கடி ஐந்து புலன்களாலும் அனுபவிக்கும் விஷயங்களே வாசனைகளாக மாறுகின்றது என்பதுதான் உண்மை. இருந்த போதிலும் காமம், தூக்கம், சோம்பேறித்தனம், சந்தேகம், பயம், சூதாட்டம், மதுபானம் போன்றவைகள் தமோகுணத்தை அடிப்படையாக கொண்ட எண்ணங்கள். இவைகளை ஒருமுறை பழக்கினாலே போதும். பலமான வாசனையாக மாறிவிடும். பட்டம், பணம், பதவி, புகழ், எப்பொழுதும் ஏதாவது செய்து கொண்டிருப்பது, போட்டி போன்றவைகள் ரஜோ குணத்தை அடிப்படையாக கொண்டது. இவைகளை பழகி கொண்டால், இவைகளை மத்தியமான அளவில் மனது பிடித்து கொள்ளும். ஜபம், தியானம், பூஜை, கோவில்-குளம், பொறுமை, மன்னிக்கும் குணம், அமைதி, விட்டு கொடுத்தல், பணிந்து போகுதல் போன்றவை சாத்வீக குணங்களை அடிப்படையாக கொண்டவை. இவைகளை, எவ்வளவு முறை பழக்கப்படுத்தி கொண்டாலும் மனதில் அது மெல்லிய வாசனைகளாகவே படியும்.

– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



# பாகவத பழம்

## பாகம் 2 – அத் 10

28

–ஸ்ரீஸ்வாமிஜி

சுபத்ரை, திரௌபதி, குந்தி, உத்தரை, காந்தாரி முதலிய ஸ்திரிகளும், க்ருபர், நகுலன், சகாதேவன், பீமன், தௌம்யர் முதலியவர்களும், ஸத்யவதி போன்றவர்களும், பகவான் கிருஷ்ணன் ஹஸ்தினாபுரத்தில் இருந்து, துவாரகைக்கு கிளம்புவதை நினைத்து, மூர்ச்சை அடைந்தார்கள்.

நல்ல விவேகியானவன், பகவானுடைய கதையைக் கேட்பான். அப்படி கேட்டு பழக்கப்பட்டவன் அந்தக் கதையை மீண்டும் மீண்டும் கேட்க வேண்டும் என்று ஆவல் மேலிட்டவனாக அந்தக் கதையை விட முடியாமல் தவிப்பான். அப்படியிருக்கும்பொழுது பகவானுடைய அவதாரக் காலத்தில் அவனைப் பார்த்து அவனுடன் அமர்ந்து, சாப்பிட்டு, அவனைத் தொட்டு, ஆலிங்கனம் செய்து, படுத்து உறங்கி அவனுடனே வாழ்ந்த இவர்களின் நிலை இத்தகையதாக ஆனதில் என்ன வியப்பு? அழுகை வந்தவர்கள் அழுதால் அபசகுனமாகிவிடுமோ என்று கஷ்டப்பட்டு அழுகையை அடக்கிக்கொண்டார்கள்.

மங்கள வாத்யங்கள் முழங்கப்பட்டன. பூமாரி பொழியப்பட்டது. உத்தவர் பகவானுக்குத் தன் குடையைப் பிடித்துக் கொண்டும், சாத்யகி சாமரத்தை வீசிக் கொண்டும் பகவானுடன் வந்தார்கள். வேதம் படித்தவர்கள் அவனுக்கு ஸ்வஸ்தி வாசகங்களைக் கூறினார்கள். இது நிர்குண பகவானுக்குப் பொருந்தாது எனினும் சகுனமாக வந்துள்ள பகவானுக்கு பொருந்தும் அல்லவா! அப்பொழுது அந்த தேசத்துப் பெண்கள் ஒருவருக்கொருவர் பகவானைப் பற்றிப் பேசிக்கொண்டார்களாம். அது பகவானுடைய தத்துவத்தைச் சொல்லுவதாக இருந்தது. அதை தன் புன்சிரிப்பாலே பகவான் ஆமோதித்தாராம்.

தர்மபுத்திரர் பகவானிடம் தனக்குள்ள அன்பால் ரத, கஜ, துரக, பதாதிகள் என்ற (ரதம், யானை, குதிரை, காலாட்படை) நால்வகைப் படையை உடன் அனுப்பினார். தன் உடன் வந்த பாண்டவர்களைத் திரும்பப் போகச் சொல்லி ப்ரியர்களான

உத்தவர் முதலியவர்களோடு துவாரகை சென்றார். குரு, ஜாங்கலம், பாஞ்சாலம், சூரஸேனம், பிரம்மாவர்த்தம், குருக்ஷேத்திரம், மத்ஸ்யதேசம், ஸாஸ்வதம், மருபிரதேசம், இவைகளை எல்லாம் கடந்து ஸௌராஷ்ட்டிரம், குந்தீபுரம் இவற்றிற்கு அப்பாலிருக்கும் துவாரகையை அடைந்தார். அப்படி வந்து சேர்ந்த பகவானை ஆங்காங்கு பூஜை செய்தார்கள். மாலை நேரம் ஆனது. சூரியன் அஸ்தமித்தான்.

**அத்யாயம் 11**

துவாரகையை வந்தடைந்த பகவான் தனது பாஞ்சஜன்யத்தை கையில் எடுத்து அதை வாயில் வைத்து ஊதினார். உடனே நகரத்தில் உள்ள பல விதமான தொழிலில் ஈடுபட்டவர்களும், கலைஞர்களும் ஒரு சேர ஓடிவந்து பலவிதமான உபசாரங்களால் பகவானை எதிர் கொண்டழைத்தனர். வஸுதேவர், அக்ரூரர், உக்ரசேனர், பலராமர், ப்ரத்யும்னன், சாருதேஷ்னன், சாம்பன் போன்றவர்கள் தாங்கள் செய்து கொண்டிருந்த காரியத்தை விட்டபடி பகவானை வந்து அடைந்தனர். பகவான் அவரவர்களுக்குத் தகுந்த சன்மானமளித்தார். சிலரை ஸிரஸாலும், வாக்கினாலும், நமஸ்காரத்தினாலும், ஆலிங்கனம் செய்தும் கைகொடுத்தார். புன்சிரிப்பினாலும், கடாக்ஷத்தினாலும் கடைசியில் உள்ளவர்கள் வரையில் எல்லோருக்கும் வரங்களைத் தந்தபடி பகவான் நகரத்தில் நுழைந்தார். தனது பெற்றோரை அடைந்து, தேவகி முதலான தாயார்களையும் தலையால் வணங்கினார். பிறகு தனது மனைவிமார்கள் வசிக்கும் பதினாறாயிரம் மாளிகைகள் இருக்கும் பிரதேசத்தை அடைந்தார். பகவானுடைய பத்தினிகள், தங்கள் தங்கள் புத்திரர்களோடு பகவானை முறைப்படி வரவேற்றனர். இப்படி இருந்துவரும் பகவானை பலர் அறியாமையால் உலகப்பற்றுள்ள மனிதன் என்றும், பெண்கள் வசப்பட்டவன் என்றும் நினைத்தார்கள்.

**அத்யாயம் 12**

சௌனகாதி ரிஷிகள் ஸூதரைப் பார்த்து உத்தரையின் கர்ப்பத்தில் இருந்த குழந்தையை பகவான் ரக்ஷித்தான் அல்லவா? அந்த பரீக்ஷித்தின் சரித்திரத்தைச் சொல்லுங்கள்'' என்று கேட்டார்கள். ஸூதர் சொல்லத் தொடங்கினார்.


தர்மபுத்திரர் ஆட்சியில் எல்லோரும் எல்லா வளமும் பெற்று சௌக்கியமாக வாழ்ந்தார்கள். எப்படி பசி உள்ளவனுக்கு உணவைத் தவிர மற்ற எதுவும் ஆனந்தத்தைத் தராதோ. அதுபோல் வாஸுதேவனிடம் பக்தி உள்ள தர்மருக்கு இதெல்லாம் ஒரு பெரிய சந்தோஷத்தைத் தரவில்லை. அழகான பகவானைப் பார்த்த பரீக்ஷித், தான் வெளியே பார்த்த ஒவ்வொரு பொருளையும் உள்ளே பார்த்த பகவான் இதுதானா என்று பரீக்ஷை செய்து பார்த்ததாலேயே "பரீக்ஷித்" என்ற பெயரை அடைந்தான். தர்மபுத்திர், தௌம்யர், கிருபர் போன்றவர்கள் புண்யாஹவாசனம் ஜாதகர்மா போன்றவற்றை செய்தார்கள். தர்மபுத்திரரும் தங்கம், பூமி, பசு, கிராமங்கள், யானைகள், குதிரைகள், அன்னம் போன்றவற்றை தானம் செய்தார்.

பக்ஷபாதம் இல்லாததில் பிரும்மாவாகவும், அனுக்ரஹிக்கும் விஷயத்தில் சிவனாகவும், மஹாவிஷ்ணுவைப் போல் எல்லோருக்கும் தஞ்சம் தருபவனாகவும், எல்லாக் குணங்களும் சேர்ந்து இருப்பதில் ஸாக்ஷாத் க்ருஷ்ணனைப் போலவும் இருப்பான்.

அப்பொழுது அந்த தானங்களால் சந்தோஷப்பட்ட அந்த ப்ராம்மணர்கள், அந்தக் குழந்தைக்கு "விஷ்ணுராதன்" என்று பெயரிட்டு அழைத்தார்கள். தர்மபுத்திரர் அவர்களைப் பார்த்து விஷ்ணுராதன் எப்படி இருப்பான் என்று கேட்க, அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். "இக்ஷ்வாகுபோல பிரஜைகளைக் காப்பாற்றுவான். ராமனைப்போல் பிராம்மண பக்தனாகவும், ஸத்ய ஸந்தனாகவும் இருப்பான். சிபிபோல் கொடையாளியாகவும், சரணாகத வத்ஸலனாகவும் இருப்பான். துஷ்யந்தன் பிள்ளை பரதனைப்போல், யாகம் செய்பவர்களுக்கு கீர்த்தியைத் தருவான். கார்த்தவீர்யன், அர்ஜுனன் போன்று வில்லாளியாக இருப்பான். சிம்மம்போல் பராக்ரமும், ஹிமகிரிபோல் நல்லவர்களுக்கு ஸேவை செய்பவனாகவும், பூமிபோல் பொறுமை உள்ளவனாகவும், பெற்றோர்களைப்போல் பிரஜைகளிடத்தில் பொறுப்பு உள்ளவனாகவும் இருப்பான். பக்ஷபாதம் இல்லாததில் பிரும்மாவாகவும், அனுக்ரஹிக்கும் விஷயத்தில் சிவனாகவும், மஹாவிஷ்ணுவைப்போல்

எல்லோருக்கும் தஞ்சம் தருபவனாகவும், எல்லாக் குணங்களும் சேர்ந்திருப்பதில் ஸாக்ஷாத் க்ருஷ்ணனைப் போல் இருப்பான். இரந்திதேவன் போல் உதாரகுணமுள்ளவனாகவும், யயாதிபோல் பரம தார்மிகனாகவும், தைர்யத்தில் மகாபலிக்கு சமமானவனாகவும், வாஸுதேவனிடத்தில் பக்தி செய்வதில் பிரஹ்லாதன் போலும், அஸ்வமேதங்களைச் செய்பவனாகவும், வயோதிகர்களை சேவிப்பவனாகவும் இந்தக் குழந்தை பிற் காலத்தில் விளங்குவான். அநேக ராஜரிஷிகளை உண்டு பண்ணுவான். கலியை அடக்குவான். பிராம்மண குமாரனால் இவனுக்கு "தக்ஷகன்" என்ற பாம்பு தீண்டும்படி ஒரு சாபம் ஏற் படப்போகின்றது. அப்பொழுது கங்கைக் கரையை அடைந்து வியாஸ புத்திரரான சுகப் பிரம்மமிடமிருந்து ஸ்ரீமத் பாகவதம் கேட்டு, இந்த சரீரத்தை விட்டு மோக்ஷம் அடையப் போகின்றான். இப்படி கூறிவிட்டு பிராம்மணர்கள் சந்தோஷமாக விடைபெற்றுச் சென்றார்கள்.

(கனியும்)



## **கவனத்தில் கொள்வோம்** – ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

* உன்னுடைய வாயில் இருந்து, உனக்கும், பிறருக்கும் எந்த விதத்திலும் உபயோகமில்லாத பேச்சுக்கள் வெளியில் வருவதை பார்.
* தேவையில்லாத வார்த்தைகளை பேசி மனோசக்தியை இழக்காதே.
* தேவையில்லாத செயல்கள் எவ்வளவு செய்கின்றாய் என்பதை கவனித்து கொள். அப்படி செய்தால், உன்னுடைய மனோ சக்தி, சரீர சக்தி இரண்டும் வீணாகின்றது.
* பிறர் செய்கின்றார்கள் என்பதற்காக ஒரு செயலை செய்யாதே. உனக்கு அது அவசியமா? நம்மால் அது முடியுமா? நாம் செய்ய தக்கதுதானா? என்று சிந்தித்து செயலாற்று.
* பிறர் உனக்கு எதை செய்தால், நீ விரும்ப மாட்டாயோ, அதை நீ பிறருக்கு செய்யாதே.
* உலகத்தில் செயலாற்றும்பொழுது, உலக வாழ்க்கை நிலையில்லாதது என்ற எண்ணம் அடி மனதில் எப்பொழுதும் நிலையாக இருக்கட்டும்.
* பிறர் தவறு செய்யும்பொழுது, அவர்களை குறை கூறுவதற்கு முன்பாக அந்த இடத்தில் உன்னை வைத்து பார்.
* அன்புடன் இருக்க பழக வேண்டும் என்பதற்காக, பந்தத்தில் அகப்பட்டு கொள்ளாதே. விரக்தியாக இருக்க வேண்டும் என்பதற் காக யாரையும் வெறுக்காதே.
* உணர்ச்சி வசப்பட்டு பேசி விடாதே. செயல்களை செய்து விடாதே. எப்பொழுதும் நிதானத்துடன், பேசி செயலாற்று.
* நீ தூங்கினாலும், கனவு கண்டாலும், விழித்திருந்தாலும், இதயம் சதா துடித்து கொண்டிருப்பது போல், உனது நாவும், எப்பொழுதும் ஹரி நாமத்தை சொல்லட்டும்.

# இங்கிலாந்தில் "அஷ்டதள பூக்கொண்டு" பூஜை

–பூர்ணிமாஜி

"அஷ்டதள பூக்கொண்டு" என்ற நம் ஸத்குருநாதரின் அருமையான பாடலை, நமது அனைத்து நாமத்வார்களிலும் பிரார்த்தனையாக பாடுவது நாம் அனைவரும் அறிந்ததே. நமது டாகுர்ஜீயின் கிருபையாலும், நமது ஸத்குருநாதரின் கருணையாலும், இந்த அற்புதமான தெய்வீக பாடலை பதினான்கு தேசங்களை சேர்ந்த அரசியல் நிபுணர்கள் (DIPLOMATS ) மற்றும் பல்வேறு நாடுகளை சேர்ந்த பல பிரமுகர்கள், கேட்கும் பாக்கியமும், பாடும் பாக்கியமும் பெற்றனர். மஹாமந்திர கீர்த்தனை பாடும் பாக்கியமும் பெற்றனர்.

பெருமதிப்பிற்குறிய இங்கிலாந்து எலிசபெத் மகாராணி அவர்கள், பட்டத்திற்கு வந்து 60 ஆண்டுகள் முடிந்ததைக் கொண்டாடும் விதமாக United Kingdom முழுவதும், 2012 ஆம் ஆண்டு ஜூன் மாத முதல் வாரம் முழுவதும் வைர விழாவாக பல நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன. Nirankari bhawan மற்றும் Sandwell Council என்ற அமைப்புகள் West Midlands என்னும் இடத்தில், இந்த வைர விழாவை மிகச்சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் செய்திருந்தனர். பதினான்கு காமன்வெல்த் நாடுகளின் தூதர்களுக்கும், மற்றும் பற்பல மத நம்பிக்கைகளை சேர்ந்த குழுவினரும் இதில் கலந்து கொண்டனர்.

குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி, UK இம்மாபெரும் விழாவில் பங்கேற்கும் விதமாக, நம் ஸத்குருநாதர் பாடும் ராகத்தில், மஹாமந்திர கீர்த்தனம் இசைத்தனர். பின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

மேலும் இச்சிறப்பான நிகழ்ச்சியில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் இயற்றப்பட்ட, பக்தி பாவமிக்க "அஷ்டதள பூக்கொண்டு" என்ற பாடல், திருமதி காமாக்ஷி மற்றும் மாஸ்டர் விக்ரம் ரவிராஜ் ஆகியோரால் பாடப்பட்டது. அங்கு கூடியிருந்த பிரதிநிதிகள் அனைவருக்கும், இப்பாடலின் ஆங்கில பிரதியும் அதன் மொழி பெயர்ப்பு பிரதியும் கொடுக்கப்பட்டிருந்தன.



இவ்விழாவின்பொழுது இப்பாடல் அரங்கேறியதன் காட்சியைத்தான், இவ்விதழ் அட்டையில் நீங்கள் பார்க்கிறீர்கள். இப்பாடல் இசைக்கப்பட்ட போது அதன் தெய்வீக தன்மை அரங்கு எங்கும் அமைதியை நிலவ செய்தது.



பாடலில் வரும் க்ஷமை, சத்தியம், தயை, சாந்தி, பக்தி, விரக்தி, ப்ரேமை, ஞானம் எனும் அஷ்டதளங்கள் கொண்ட பூக்கொண்டு இறைவனை பூஜிப்போம் என்ற கருத்தும், மேலும் அதில் ஒலிக்கும் உலகளாவிய சகோதரத்துவமும், நல்லிணக்கமும் அனைவரின் மனதையும் கவர்ந்ததில் வியப்பிற்குத்தான் இடம் உண்டோ? இந்நிகழ்ச்சி டாக்டர்.வி.ராஜமூர்த்தியின் தலைமையில், G.O.D,UK சத்சங்கத்தை சார்ந்த, ஸ்ரீராமநாமசேது என்னும் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்கு ஒரு மாதம் முன்பாக இங்கிலாந்து மேல் சபையில் (House of Lords) ராம நவமி கொண்டாட்டத்தில், ஸ்ரீ ராம பரிவார், நமது மதுரபுரி ஆஸ்ரமத்திலுள்ள கன்யாகுமரி ஜய ஹனுமான் மற்றும் நமது ஸத்குருநாதருக்கு பூஜை செய்யப்பட்டு, மஹாமந்திர கீர்த்தனமும் பாடப்பட்டது. இந்த மஹாமந்திர கீர்த்தனத்தில் பல பாராளுமன்ற அங்கத்தினர்களும் (எம்.பி), மேல்சபை அங்கத்தினர்களும் கலந்து கொண்டனர்.

**ஜூன் 22, 2012 - ஹைதராபாத்** "காட்" சத்சங்கத்தை சேர்ந்த ஸ்ரீரவிச்சந்திரன் & ஸ்ரீமதி லதாரவிச்சந்திரன், திரு.தியாகராஜன் மூலமாக செய்த ஏற்பாட்டில், **Jawaharlal Nehru institute of Banking and Finance**இல் ராமானுஜம்ஜி சுமார் 80 வளரும் வங்கி ஊழியர்கள் முன்னர் **'Personal Effectiveness'** என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

சிறு வயதில் உடலில் பலம் இருக்கிறது. ஆனால் தெய்வீகமான விஷயங்களான ஜபம், தியானம், கீர்த்தனம் போன்றவற்றில் மனம் ஈடுபடுவதில்லை. வயதான பின்னரோ, உடலில் பலம் போய் விடுகிறது. அப்பொழுது மனது இத்தகைய தெய்வீக விஷயங்களுக்கு மிகவும் ஆசைப்படுகிறது. ஆனால் வயதான பின்னர், பலமில்லாதிருப்பதால் உடல் ஒத்துழைக்க மறுக்கிறது.

– மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

## சனாதனப் புதிர் : பகுதி – 41 –ஆத்ரேயன்

(விடைகள் அடுத்த இதழில்)

1. கல்வி கேள்விகளில் சிறந்த, ப்ரம்மத்தை அறிந்த உபநிஷத்தில் காணப்படும் இரண்டு பெண்மணிகள் யார்?
2. ரிக் வேதத்தில் ப்ரஹ்ம வாதின் என்று போற்றப்படும் 27 பெண்மணிகள் யார்?
3. இராமாயணத்தில் வரும் முக்கியமான பெண்மணிகள் யார்?
4. இராமாயணத்தில் வரும் பல பெண்மணிகளில் கதை நகர காரணமாய் இருந்தவர்கள் யார்?
5. மஹாபாரதத்தில் காணப்படும் முக்கியமான 4 பெண்மணிகள் யார்?
6. மஹாபாரதத்தில் காணப்படும் மற்ற சிறந்த பெண்மணிகள் யார்?
7. புராணங்களில் காணப்படும் சிரேஷ்டமான பெண்கள் யார்?
8. காஞ்சீபுரம் கைலாசநாதர் கோவில் கட்டியதில் முக்கிய பங்கு வகிப்பவர் யார்?
9. ராமகிருஷ்ண பரமஹம்ஸரை தெய்வமாகக் கருதிய பெண் பக்தைகள் யார்?
10. ரிக் வேதத்தின் க்ருஹ்ய ஸூத்திரங்களான ஆஸ்வலாயனா, சாங்கீயாயனா, மூன்று பெண் ரிஷிகளைப் பற்றி கூறுகின்றன. இவர்கள் யார்?

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited

ஸ்ரீ ஹரி:

*ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதன் துணை*

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME

# குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், சென்னை-83.
## ஸ்ரீ மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனின்
## பத்தொன்பதாவது வருட ப்ரஹ்மோத்ஸவப் பத்திரிக்கை

***இடம்*** / Place***: மதுரபுரி*** / Madhurapuri ***தேதி*** / Date***: 09.08.2012*** to ***18.08.2012***

## நிகழ்ச்சி நிரல் / PROGRAMME

| | | | |
|---|---|---|---|
| 09-08-2012 | வியாழன் | இரவு | நந்தோத்ஸவம்<br>ஹம்ஸ வாஹனம் |
| 10-08-2012 | வெள்ளி | மாலை | சேஷ வாஹனம் |
| 11-08-2012 | சனி | மாலை | ஸிம்ஹ வாஹனம் |
| 12-08-2012 | ஞாயிறு | மாலை | புன்னைமர வாஹனம் |
| 13-08-2012 | திங்கள்<br>ஏகாதசி | காலை<br>மாலை | விசேஷ திருமஞ்ஜனம்<br>கருடஸேவை |
| 14-08-2012 | செவ்வாய்<br>துவாதசி | காலை<br>மாலை | கோவிந்த பட்டாபிஷேகம்<br>யானை வாஹனம் |
| 15-08-2012 | புதன் | மாலை | நிகுஞ்ஜோத்ஸவம் |
| 16-08-2012 | வியாழன் | காலை<br>மாலை | குதிரை வாஹனம்<br>ஜானவாஸம்-நாதஸ்வரம்-கடலூர் ஸ்ரீபாலசந்தர் & ஸ்ரீபாலமுருகன் குழுவினர் |
| 17-08-2012 | வெள்ளி | காலை<br>மாலை | ஸ்ரீராதாகல்யாணம்<br>தெப்போத்ஸவம் |
| 18-08-2012 | சனி | காலை | ரதோத்ஸவம்<br>விடையாற்றி |

*பாகவதோத்தமர்கள் வந்திருந்து கதாச்ரவணம், நாமஸங்கீர்த்தனம் மற்றும் உத்ஸவ வைபவங்களில் கலந்துகொண்டு, பகவத் கிருபைக்கும், குரு கிருபைக்கும் பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.*

**இப்படிக்கு**
**மஹாரண்யம்**
**ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**

**மதுரபுரி**
**ஆஷாட ஏகாதசி**

***Hare Rama Hare Rama Rama Rama Hare Hare Hare Krishna Hare Krishna Krishna Krishna Hare Hare***

# ஒரு கனவு

ஸ்ரீராம்குமார் (ரவி),
*ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் நினைவு த்ராவிட வேத ஆகம பாடசாலை, திருநாங்கூர்.*

அன்று ஒரு நாள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், உபன்யாசம் செய்துகொண்டிருந்தார்கள். உபன்யாசம், ஒரு ஜீவன் உலகில் எப்படி பிறக்கிறது என்பதை பற்றியதாக இருந்தது. அதன் நினைவாகவே அன்று இரவு உறங்கிவிட்டேன்.

உறக்கத்தில் விடியற்காலையில், ஒரு அருமையான கனவு வந்தது. அதில் நானும், எனது பால்ய நண்பன் சாந்தீபனி குருகுல ப்ரின்சிபால் திரு.பாலாஜி அவர்களும், வானத்தில் மேல் நோக்கி சென்றுகொண்டிருந்தோம். அப்பொழுது பாலாஜி, "நாம் மேலே போய் என்ன செய்யப்போகிறோம்" என்றார். நான் அவரிடம், "உலகில் பிறந்து பகவானுக்கு கைங்கர்யம் செய்யலாமே" என்றேன். அப்பொழுது, வானத்தில் பகவான் இறங்கி செல்லும் காட்சியை கண்டோம். உடனே அவரிடம் சென்று, "நாங்கள் மீண்டும் உலகில் பிறந்து உங்களுக்கு கைங்கர்யம் செய்ய ஆசைப்படுகிறோம்" என்று சொன்னோம். "அவரும் அப்படியே ஆகட்டும்" என்று அருளிச்சென்றார்.

நாங்கள் இருவரும் ஒரு மேகத்தின் மேல் இருப்பதைக்கண்டோம். நான் "இப்பொழுதே இறங்கிவிடலாம்" என்றேன். அவர், "சிறிது பொறு; நல்ல நேரம் வரட்டும்" என்று கூறினார். இருந்தாலும், அவரிடத்தில், "நான் முன்னே செல்கிறேன்" என்று கூறினேன். உடனே நான் மேகத்திலிருந்து மழையுடன் பூமியில் இறங்குவது போலவும், பயிர்களுடன் கலப்பது போலவும், பின்பு ஒரு கர்ப்பத்தில் இருப்பது போலவும் உணர்ந்தேன். மீண்டும் பிறந்து, குழந்தையாக தவழ்வது போல் கண்டேன். இதன் மூலம், "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே ஆவோம்" என்ற ஆண்டாள் அருளிய திருப்பாவை பாசுரம்தான் நினைவுக்கு வருகின்றது.


என்றும் அவனுக்கே பணி செய்ய ஸ்ரீ மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதன் நமக்கு அருளட்டும்.

GOD
Global Organisation for Divinity
presents

A Heritage Festival

# SAMSKRUTI '12

22nd, 28th, 29th Jūlȳ, 2012



REGISTRATIONS CLOSE BY JULY 15TH 2012

LAST DATE FOR SUBMISSION OF ENTRIES FOR ONLINE EVENTS JULY 20TH 2012

EXCITING PRIZES TO BE WON

ROLLING SHIELD FOR BEST SCHOOL TEAM & BEST COLLEGE TEAM

FOR EVENT GUIDELINES, VISIT OUR FACEBOOK PAGE OR CONTACT US AT
9840397927
9894184802

SEND IN YOUR REGISTRATIONS TO
register.samskruti@gmail.com

**CLASSES 6TH – 8TH**

SAJAO HARI KE MATKE KO
(Pot Painting)
CHITRANJALI
(Drawing)
SAJAO THAKURJI KO
(Dress Designing)
HANDMADE GIFTS
(Art from Waste)
DIVINE WISHES
(Greeting Card Making)

**CLASSES 9TH – 12TH**

SERENE TRENDZ
(T Shirt Painting)
PURANAVA
(Spiritual & Heritage Quiz)
TRIBUTE TO MAHATMAS
(Skit)
NATWARLAL KO NATYANJALI
(Group Dance)
TEMPLE TREASURES
TRADITIONAL TREASURES

**INTER COLLEGE EVENTS**

PURANAVA
(Spiritual & Heritage Quiz)
ALANKAAR
(Decorate the Deity)
NAMA PRACHAAR
(Poster Designing)
KRISHNA TALKIES
(Short film making)
AN EYE FOR DIVINITI
(Photography)

## ஆலயம் தொழுவது சாலவும் நன்று –3

திரு.எஸ்.ராஜப்பன்

கலியுக வரதனாய் அவதரித்து, மக்களை ரக்ஷித்திட கருதிய பகவான் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீஆதிசேஷனிடம் பாரத பூமியில் ஓர் மலை உருவாய் இறங்கிட பணித்தார். ஸ்ரீஆதிசேஷனும் கருடகிரியில் ஓர் மலையாய் தோன்றினார். அன்றுமுதல் அத்திருத்தலம் "ஸ்ரீசேஷகிரி" என்று வழங்கப்படுகிறது. பகவானும் புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்திரமும் துவாதசி திதியும் கூடிய சுப தினத்தில் ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள் என்னும் திருநாமத்துடன் இங்கு திருக்கோயில் கொண்டார். அப்பொழுது ஆதிசேஷன் தாம் பெருமாளுக்கு குடையாக இருந்து, கைங்கரியம் செய்திட விரும்புவதாக பெருமாளிடம் விண்ணப்பம் செய்தார். உடனே பகவானும் ஆதிசேஷனிடம் "உமது அபிலாஷை தக்ஷிண கருடகிரியில் நிறைவடையும்" என்று கூறினார். எனவே தக்ஷிண கருடகிரியாகிய திருமலைவையாவூரில், ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாளின் ப்ரபாவளியின் (திருவாச்சியின்) மத்தியில், ஸ்ரீஆதிசேஷன் குடையாக சேவை சாதிப்பதை காணலாம். இதனால் இத்திருத்தலம் "தக்ஷிண சேஷகிரி" என்றும் அழைக்கப்படுகிறது. இதனை பற்றி குறிப்பிட்டு சொல்லி நம் ஸத்குருநாதர், இதனை திருக்கோயில் எம்பெருமான் கர்ப்பக்ரஹத்தில் கவனித்து சேவித்து வரும்படி அடியோங்களை ஆக்ஞாபித்தது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பழங்காலத்தில் தொண்டைமான் சக்கரவர்த்தி என்னும் பேரரசன் மிக சிறந்த விஷ்ணு பக்தனாக இருந்தான். இவனது தூய பக்தியினால் மகிழ்வுற்று திருப்பதி ஸ்ரீஸ்ரீனிவாசபெருமாள் இவன் போர்களில் வெற்றி வாகை சூடிட தமது திவ்ய மங்கள படைக்கலன்களான சங்கு, சக்கரம் இரண்டையும் இவ்வரசனிடம் கொடுத்தருளினார். மன்னனும் எல்லா போர்களிலும் வெற்றி பெற்றான். திருப்பதியிலுள்ள ஸ்ரீதிருவேங்கடமுடையானின் திருக்கோவிலை மிகவும் அழகுபட நிர்மாணித்தான். எம்பெருமானின் ஆக்ஞைப்படி திருமலைவையாவூரிலும் திருக்கோவிலை நன்கு அமைத்தான். திருமாலும் கையில்

செங்கோலுடன் குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தில் தோன்றி சக்கரவர்த்திக்கு காட்சி அளித்தார். இன்றும் இக்குன்றிலுள்ள பாறையில் குதிரைகளின் கால் குளம்படித்தடங்களும், ரத சக்கரங்களின் தடயமும் காணப்படுவதாக கூறப்படுகின்றது.

எம்பெருமானார், இளையாழ்வார், யதிராஜர், திருப்பாவை ஜீயர், நம் கோயிலண்ணன், சடகோபன் பொன்னடி, ஸ்ரீபாஷ்யகாரர், உடையவர் என்று எல்லாம் சிலாகித்து கூறப்படும் ஸ்ரீவிசிஷ்டாத்வைத சித்தாந்த ப்ரவர்த்தகரான ஸ்ரீமத் பகவத் ராமானுஜ மஹாமுனி, இந்த திருத்தலப்பெருமாளை சேவித்து மங்களாசாஸனம் செய்துள்ளார். மேலும், அவர் இந்த திருத்தலத்திற்கு "வைகுண்டகிரி" என்னும் திருநாமத்தை சாற்றி உள்ளார். இவர் இங்கு தங்கி தியானம் செய்தார் என்றும் அதனால் இத்திருத்தலம் "ராமானுஜ யோககிரி" என்னும் திருப்பெயராலும் அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

500ஆண்டுகளுக்கு முன்பு விஜயநகர பேரரசை சார்ந்த ராஜா தோடர்மால் எனும் அரசன், இத்திருக்கோயிலுக்கு பலவிதமான மானியங்களை வழங்கி, கோயிலின் அன்றாட பூஜைகளும் (திருவாராதன கிரமங்களும்) திருவிழாக்களும் (திருநாட்களும்) நடைபெற வழி செய்துள்ளார். இவர் இங்கு ஸ்ரீராமானுஜருக்கும் தமக்கும் தனித்தனியே சிலை-களை வடித்து பிரதிஷ்டை செய்துள்ளார்.

திருப்பதி வேங்கடமுடையான் போன்றே இங்கு ஸ்ரீபிரசன்ன வேங்கடேச பெருமாள் சேவை சாதிக்கின்றார். தனி சன்னதியில் கொலு வீற்றிருந்து ஸ்ரீஅலர்மேல் மங்கை தாயார் அருள் பாலிக்கின்றார். ஸ்ரீஆண்டாளுக்கு இங்கு தனி சன்னதி உள்ளது. உட்பிரகாரத்தூண்களில் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. மலை அடிவாரத்தில் "வராஹ தீர்த்தம்" என்னும் திருக்குளம் அழகுடன் விளங்குகிறது.

(தொடரும்)

# ஸ்ரீசாந்தீபனி குருகுல ஸேவா டிரஸ்ட் (A.P) ஹைதராபாத்



ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன், ஹைதராபாத் சாந்தீபனி குருகுல வேத பாட சாலை நன்கு செயல்பட உதவும் அன்புள்ளங்களை பாராட்டும் விதமாக 24.6.2012 அன்று ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. முதலில் வித்யார்த்திகள் வேதபாராயணம் செய்தனர். பின்னர் நிர்வாகிகள் ஸ்ரீரவிச்சந்திரன் & ஸ்ரீமதி லதாரவிச்சந்திரன், பாடசாலை செயல்பாடுகள் குறித்து பேசினர். பின் முக்கிய அத்யாபகர் ப்ரும்மஸ்ரீ ராகவேந்திர கனபாடிகள், குருகுலம் மற்றும் பாடசாலை கல்வி (Syllabus) குறித்து பேசினார். மதுரபுரி சாந்தீபனி குருகுல பிரின்ஸிபால் ப்ரும்மஸ்ரீ பாலாஜி அவர்கள், வேதத்திற்காக உழைக்க வேண்டிய அவசியம் குறித்து பேசினார். வேதத்திற்காகவும், பாகவத தர்மத்திற்காகவும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஆற்றி வரும் பணிகள் குறித்து, ராமானுஜம்ஜி பேசினார். ப்ரும்மஸ்ரீ பாலாஜி வந்திருந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கினார்.

## பாலகர்களுக்கு ஒரு கதை



### *எதை பேசலாம்?*

ஒரு ஊரில் விவேகமுடைய ஒரு சாது இருந்தார். அவர் வீணாக பொழுது போக்கவே மாட்டார். காலத்தை எப்பொழுதும் உபயோகமான விஷயங்களிலேயே செலவிட வேண்டும் என்பது அவரது கொள்கையாக இருந்தது. இதனால், சகலருக்கும் அவர் மேல் நல்ல மரியாதை இருந்தது. அவரிடம் ஒருவன் வந்து "அய்யா! நான் உங்கள் நண்பனை பற்றி ஒரு விஷயத்தை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்" என்றான். உடனே அந்த சாது "நீ விஷயத்தை சொல்வதற்கு முன்னால், உன்னை நான் சோதிக்க வேண்டும். நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்" என்றார். அந்த மனிதனும் சரி என்றான்.

அந்த சாது கேட்ட முதல் கேள்வி "நீ சொல்ல போவது உண்மையா?" என்பதுதான். அம்மனிதன் உடனே "அய்யா! அது எனக்கு தெரியாது. இது நான் கேள்விப்பட்டதுதான். நான் நேரில் பார்க்கவில்லை. எனக்கு அந்த விஷயத்தை சொன்னவர்களும் அதை நேரில் பார்க்கவில்லை" என்றான். அதை கேட்ட சாதுவின் முகம் கொஞ்சம் சுருங்கியது.

அடுத்தபடியாக அந்த சாது "அது பொய்யாகவும் இருக்கலாம் அல்லவா? சரி! நீ சொல்ல போகும் விஷயம் நல்ல விஷயமா?" என்றார். அதற்கு அம்மனிதன் "அது ஒன்றும் நல்ல விஷயம் இல்லை. தேவையில்லாத கெட்ட செய்திதான். அதைத்தான் பரபரப்பாக உங்களிடம் சொல்ல வந்தேன்" என்றான்.

இப்பொழுது அந்த சாது அம்மனிதனை ஏற இறங்க பார்த்தார். "நீ என்னிடம் என் நண்பனை பற்றி கெட்ட விஷயத்தை சொல்ல போகிறாய். அதிலும் அது உண்மை என்று உனக்கு தெரியாது. சரி போகட்டும்; நீ சொல்வது எனக்கோ உனக்கோ அல்லது என் நண்பனுக்கோ உபயோகமாக இருக்குமா?" என்றார் சாது. அம்மனிதன் சாதுவின் கேள்விகளால் கலங்கினான். கொஞ்சம் யோசித்தான். பின்னர் "நான் சொல்வதை நீங்கள் கேட்பதால், ஒருவருக்கும் நன்மை வராது" என்றான்.

சாது உடனே அவனை பார்த்து "பின் எதற்காக இதை சொல்கிறாய்? எதற்காக அதை நான் கேட்க வேண்டும்?" என்றார். அம்மனிதன் "அய்யா! உங்கள் நண்பனை பற்றி சொன்னால், நீங்கள் ஆவலுடன் கேட்பீர்கள் என்று எதிர்பார்த்து சொல்ல வந்தேன்" என்றான்.

அதை கேட்ட சாதுவுக்கு கோபம் வந்து விட்டது. சாது நேரடியாகவே "உண்மையற்ற, தீய, பயனற்ற விஷயத்தை கேட்டு என் நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. அதற்கு வேறு ஆளை பார். என் நண்பனை பற்றி ஏதாவது நல்ல விஷயமாக பேசு" என்றார்.

அம்மனிதன் திகைத்து நின்றான். சாதுவின் வார்த்தைகளில் ஆழ்ந்த அர்த்தம் தொனிப்பதை உணர்ந்தான் அவன். சாது போலவே, தானும், உண்மையை, நல்லவற்றை, பயனுள்ளதை பேசுவது என்று முடிவெடுத்தான். அப்படியே இருந்து மிகுந்த பயனை அடைந்தான்.



## சென்ற மாத சத்சங்கங்கள்

**ஜூன் 7 – சேங்கனூர் ஸ்ரீசிவலோகநாயகி ஸமேத ஸ்ரீகைலாசநாதர் திருக்கோவில்** திருப்பணிகள் சைதன்யமஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா மூலமாக சிறப்பாக செய்யப்பட்டு, **சேங்கனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்** அவர்கள் முன்னிலையில், ஜூன்7 அன்று **கும்பாபிஷேகம்** மிக விமரிசையாக நடைபெற்றது.

**ஜூன் 16** அன்று வேலூர் அருகிலுள்ள **அணைக்கட்டு** லக்ஷ்மி வெங்கடேஸ்வரா திருமணமண்டபத்தில் **மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** நடைபெற்றது. இதில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு அருளுரை வழங்கினார்கள். சுமார் 1500அன்பர்கள் இதில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**ஜூன் 9** அன்று **விருதுநகரில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** ராமானுஜம்ஜி முன்னிலையில் நடைபெற்றது. விருதுநகர் சொக்கநாதர் கோவிலில் நடைபெற்ற இப்பிரார்த்தனை கூட்டத்தில், 600க்கும் மேலான அன்பர்கள் கலந்து கொண்டனர்.

**ஜூன் 10** அன்று **சிவகாசி** நாமத்வார் புதிய இடத்திலிருந்து இயங்க ஆரம்பித்துள்ளது. **புதிய நாமத்வார் திறப்பு விழா**வில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டனர். காலை 6 மணிக்கு ஸ்ரீமாதுரீ ஸகீயுடன் ஸ்ரீப்ரேமிகவரதனும் குருநாதர் பாதுகைகளும், பழைய நாமத்வார் இல்லத்திலிருந்து நாமகீர்த்தனத்துடன், நகர்வலமாக பக்தர்களால் எழுந்தருளப்பட்டது. பின்னர், ராமானுஜம்ஜி **ஸ்ரீமாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு திருமஞ்சனம்** செய்தார். வந்திருந்த அனைத்து அன்பர்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. புதிய நாமத்வார் அமைய பாடுபட்ட அன்பர்கள் கௌரவிக்கப்பட்டனர். மாலை ராமானுஜம்ஜி, உபன்யாசம் செய்தார். பல ஊர்களிலிருந்து, அன்பர்கள் வந்து அன்றைய தினத்தின் பல நிகழ்ச்சிகளிலும், உற்சாகமாக கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.



# ***மலேசியா மற்றும் சிங்கப்பூர் சத்சங்கங்கள்***

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாணைப்படி பாக்யநாதன்ஜி மலேசிய, சிங்கப்பூர் நாடுகளுக்கு சத்சங்கங்களில் பங்கு கொள்ள சென்றார். சென்ற வருடம் ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாசிகளுடன், பாக்யநாதன்ஜியால் செப்டம்பர் 17 அன்று, துவக்கி வைக்கப்பட்ட மலேசிய நாமத்வாரில் எழுந்தருளி இருக்கும் **ஸ்ரீமாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதன்** மற்றும் ஸத்குருநாதர் பாதுகைகளுக்கும் இங்கு மிக அழகாக பூஜையும் ஆராதனையும் நடைபெற்று வருகிறது. தினமும் பல அன்பர்கள் பங்கு கொண்டு மஹாமந்திர நாமகீர்த்தனத்தை உற்சாகமுடன் செய்து வருகின்றனர். மலேசிய நாமத்வாரை சேர்ந்த ராஜேஸ்வரிஜி, சுனிதாஜி, ப்ரேமலதாஜி, நாதன்ஜி, ஆனந்தா-கமலா மற்றும் பாலன்-திலகவதி தம்பதிகள், Dato Dr.லோகநாதன்-மனோன்மணி தம்பதியினர், வினோதினிஜி, சுகுணாஜி ஆகியோர் மிக மிக அழகாக பலருக்கும் குருநாதரின் உபதேசங்கள் சென்றடைய வேண்டும் என்று பாடுபட்டு வருகின்றனர்.

ஜூன் 10ம் தேதி **மலேசிய நாமத்வார்** சார்பாக, **சோமா ஹால்**, கோலாலம்பூரில் ஒரு பெரிய **மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை** ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. ஏராளமான அன்பர்கள் கலந்து கொண்டிருந்த இதில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் மதுரகீதங்களும், மஹாமந்திர கீர்த்தனமும், பாக்யநாதன்ஜியின் உபன்யாசமும் இடம் பெற்றிருந்தது. ஜூன் 15 ஏகாதசி அன்று மலேசிய நாமத்வாரில் ஸ்ரீமாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீபிரேமிக வரதனுக்கும் குருநாதர் பாதுகைகளுக்கும் பூஜையும், அபிஷேகமும் பாக்யநாதன்ஜி செய்தார். அன்று **நாமத்வாரில்** 6AM - 6PM வரை அகண்ட மகாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது. பின்னர் ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனைகளும், பாக்யநாதன்ஜி, ஸ்ரீஸ்வாமிஜியின் சரிதம் குறித்து செய்த **மதுரஸ்மரணம்** உபன்யாசமும் இடம் பெற்றிருந்தது. **கலிதர்ம உந்தியார்** குறித்தும் நாமத்வாரில் பாக்யநாதன்ஜி பேசினார்.

ஜூன் 17, 18 தேதிகளில் Janda Baikஇல் நடைபெற்ற

**மதுரஉத்ஸவ நிகழ்ச்சியில்**, காலை முதல் இரவு வரையிலுமான நடைபயிற்சி, உடற்பயிற்சி, ப்ரபோதனம், பாகவத தர்ம விளக்கம், உபன்யாசம், மதுரகீதங்கள், டோலோத்ஸவம் என அனைத்தும் இடம் பெற்றிருந்தது. இது பலருக்கும் மிகவும் பிடித்திருந்தது.




மேலும் பாக்யநாதன்ஜி, மலேசியாவில் ஸ்ரீஞானானந்த மண்டலி, பேண்டிங் மாரியம்மன் கோவில், ஹைகாம் கோவில், ஷீரடி சமாஜம் உட்பட பல கோவில்களிலும், Seafield, Castlefield பள்ளிகளிலும்



கூட்டு பிரார்த்தனை, பிரார்த்தனையின் வலிமை, கலிதர்ம உந்தியார், பாகவத தர்மம் போன்ற பல தலைப்புகளில், பல சத்சங்கங்களை நிகழ்த்தினார்.

**சிங்கப்பூர்** காட் சத்சங்கத்தை சேர்ந்த பாலசுப்ரமணியன்ஜி அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு Singapore Geylang Sivan Templeஇல் ஜூன் 1,2,3 தேதிகளில், "Practical spirituality in today's context" என்ற தலைப்பில் **கலிதர்ம உந்தியாரில்** ஸ்ரீஸ்வாமிஜி எடுத்து சொல்லும் **யுகதர்மம்** குறித்து, பாக்யநாதன்ஜி பேசினார். அதே தினங்களில் கோபகுடீர குழந்தைகளின் நாட்டிய, நாடக, கீத நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தது. மேலும் சிங்கப்பூரில், பல இல்லங்களில் நடைபெற்ற சத்சங்கங்களில் பாக்யநாதன்ஜி கலந்து கொண்டார். சிங்கப்பூரில் புதியதாக நாமத்வார் ஆரம்பிப்பதற்கு வேண்டிய சில அலுவல்களில் பங்கு கொண்டிருந்தார். இருபதாம் தேதி அவர் சென்னை திரும்பினார்.

## சனாதனப் புதிர் : பகுதி – 40 விடைகள் –ஆத்ரேயன்

1. ராணி மதயந்தி அணிந்திருக்கும் குண்டலங்கள்
2. அஜன் , இந்துமதி
3. கிருத யுகத்து அரசர். அவரது மகன் ஹரி இறந்துவிட, அவர் மீளாத்துயரத்தில் இருக்க நாரதர் அவரைத் தேற்றுகிறார். (மஹாபாரதம் துரோண பர்வா; சாந்தி பர்வா)
மற்றொருவன் ஸுமாலியின் புத்திரன். அரக்கன் கரன் , தூஷணன் இறந்ததை ராவணனுக்கு முதன்முதலில் தெரியப்படுத்துகிறான். ராம ராவண யுத்தத்தில் ஹனுமாரால் கொல்லப்படுகிறான்.
4. துங்கபத்ரா நதிக்கரையில் இருக்கும் அலம்பூர் (மஹபூப் நகர் - ஆந்திரா) இதை தக்ஷிணகாசி என்றும் சொல்லுகிறார்கள்.
5. கார்த்திகை மாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசியில் பூனாவில் இருந்து 23 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள ஆலந்தி என்ற இடத்தில்
6. அருணன் ; தொடைகள் இல்லாமல் ;
7. தாரா(பூமி), அனலா(நெருப்பு), அப:(தண்ணீர்), அனிலா (காற்று), த்ருவா(நக்ஷத்திரம்), சோமா(சந்திரன்) ப்ரபாஸா (காலை உதயம்) ப்ரத்யுஷா (வெளிச்சம்). இவர்கள் அஷ்ட வஸுக்கள்; ரிக்வேத சம்ஹிதைகள் இவர்களைப் போற்றுகின்றன.
8. வைஸ்வானர வித்யா என்ற ப்ரஹ்ம வித்தை கற்பதற்கு.
9. கி.மு. 509 முதல் கி.மு.477 வரை (32 ஆண்டுகள்)
10. கலி 2593 , கி.மு. 509 நந்தன வருடம்- வைசாக மாதம் சுக்ல பக்ஷ பஞ்சமி- ஞாயிற்றுக்கிழமை- புனர்வஸு நக்ஷத்திரம்- அபிஜிந் முகூர்த்தம்- நண்பகல் நேரம்.

**ஜீன் 10, 2012** மழைக்காக **குடியாத்தம்** அருகிலுள்ள **வெங்கடாபுரம்** கிராமத்தில் 48நாட்களாக தினமும் 12மணி நேரம் அகண்டமாக நடைபெற்ற மஹாமந்திர கீர்த்தனம் நிறைவு பெற்றது. சென்னை ப்ரேமிக பவனத்திலும் மழைக்காக பிரார்த்தனை செய்து, மே 16 மாலை 6மணி முதல் மே17மாலை 6மணி வரை, 24மணி நேரம் அகண்டமாக மஹாமந்திர கீர்த்தனம் செய்யப்பட்டது.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

## - ஜனனி ஸ்ரீபகவன்தாஸ் பாபா- 3

ஸ்வாமி பகவன்தாஸ் பாபா மிகவும் க்ருபாளு. இன்றும் அவரது பக்தர்கள் அவருடைய க்ருபையை நினைத்து உருகி கூறும் கதைகள் அநேகம். பக்த ச்ரேஷ்டரான ஸ்ரீஜகன்னாத ப்ரஸாத பக்தமாலீ, பாபா தன்மேல் புரிந்த நிர்வ்யாஜமான க்ருபையை பின் வருமாறு ஸ்மரிக்கிறார் :-

பூஜ்ய ஸ்ரீபண்டித ராமக்ருஷ்ணதாஸ் பாபாவின் ப்ரேரணையால் ஸ்ரீபகவன்தாஸ் பாபா எனக்கு தீக்ஷை அளித்தார். தீக்ஷையான பின் முடிந்தபொழுதெல்லாம், நான் ப்ருந்தாவனம் செல்ல ஆரம்பித்தேன். ஆனால் அப்பொழுது எனது மாத சம்பளம் ரூபாய் பத்து மட்டுமே. எப்பொழுதும் பணப் பற்றாக்குறை இருந்து கொண்டே இருக்கும். அதனால் பலமுறை ப்ருந்தாவனம் செல்ல வேண்டும் என்ற எனது எண்ணம் வெறும் ஆசையாகவே இருந்துவிடும்.

ஒரு முறை, ராதாஷ்டமி நெருங்கி கொண்டிருந்த ஸமயம், ப்ருந்தாவனம் செல்ல வேண்டும் என்ற எனது உத்வேகம் அதிகமாயிற்று. ராதாஷ்டமி உத்ஸவத்தை பாபா மிகவும் விமரிசையாக கொண்டாடுவார். ப்ருந்தாவன் சென்றேயாக வேண்டும் என்ற நிச்சயத்துடன், நான் வீட்டை விட்டு கிளம்பினேன். ப்ருந்தாவனம் வரை செல்ல வேண்டியதற் கான டிக்கெட் பணம் என்னிடம் இல்லை. கோடா ரயில் நிலையத்திலிருந்து, மூன்று அணாகளுக்கு அடுத்த ஸ்டேஷனுக்கான டிக்கெட்டை வாங்கி கொண்டு இரயில் வண்டியில் ஏறி விட்டேன்.

வழியில் டிக்கெட் பரிசோதகர் டிக்கெட்டுகளை பயணிகளிடம் கேட்டுக் கொண்டே வந்தார். நான் அமர்ந்து கொண்டிருந்த பெஞ்சிற்கும் வந்து விட்டார். அதில் நான்கு பேர் அமர்ந்திருந்தோம். டிக்கெட் கலெக்டர் மற்ற மூவரின் டிக்கெட்டுகளை பரிசோதித்து விட்டு, என்னிடம் ஒன்றுமே கேட்காமல் சென்றுவிட்டார். நான் குருநாதரை த்யானித்தவாறே மௌனமாக அமர்ந்து கொண்டிருந்தேன்.

டிக்கெட் பரிசோதகர் அப்படியே சென்று விட்டார்.

வண்டி மதுரா ஸ்டேஷன் வந்தடைந்தது. நான் குருதேவரின் நாமத்தை ஜபித்தவாறே, ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்துவிட்டேன். அங்கேயும் டிக்கெட் கலெக்டர் என்னை ஒன்றுமே கேட்கவில்லை. ஆஸ்ரமம் சென்றதும் நான் பாபாவிடம் நடந்தவற்றை எல்லாம் கூறினேன். பாபா ஒரு புன்னகை பூத்தார். அது எனக்கு அனைத்தையும் உணர்த்தியது.

டோபீ குஞ்சத்தை சேர்ந்த ஸ்ரீமாதவ்தாஸ் பாபாஜியிடம் ஸ்ரீபகவன்தாஸ் பாபா மிகவும் ப்ரேமையாக இருப்பார். இருவரும் பரஸ்பரம் மரியாதையுடனும், ஒருவர் மற்றொருவரின் க்ருபையை எதிர்பார்ப்பது என்றும் இருந்தனர். ஒரு முறை ஒரு வழக்கு விஷயமாக மாதவ்தாஸ் பாபா, பகவன்தாஸ் பாபாவிடம் ப்ரார்த்தித்தார். அவ்வழக்கு மாதவ்தாஸ் பாபாவிற்கே சாதகமாக முடிந்தது.

கான்பூரைச் சேர்ந்த ஸ்ரீபச்சூலால்ஜீ, ஸ்வாமி பகவன்தாஸ்ஜீ அவர்களின் சிஷ்யர். எப்பொழுதும் அவர் தன்னை பாபாவின் ஸேவையிலேயே ஈடுபடுத்திக் கொள்வார். அவர் பாங்கே பிஹாரியை தினமும் சென்று தரிசிப்பதை நியமமாகக் கொண்டிருந்தார்.

ஒருநாள் கோயிலுக்கு அவர் கிளம்பும்பொழுது பாபா அவரிடம், "ரஸிக பிஹாரியையும் தரிசித்து விட்டு வா" என்று கூறினார். பாபாவின் சொல்படி, பாங்கே பிஹாரியை தரிசித்த பின் ரஸிக் பிஹாரியையும், ஸ்ரீபச்சூலால் தரிசிக்கச் சென்றார். டாகுரை தரிசித்து விட்டு, அதன் பின்புறத்தில் அமைந்திருந்த ஆசார்யர்களின் ஸமாதியை அவர் ப்ரதக்ஷிணம் செய்தார்.

அவர் ப்ரதக்ஷிணம் செய்து திரும்புகையில், பின்புறத்திலிருந்து ஒரு பாபா, "பச்சூலால்! ப்ரஸாதத்தை வாங்கிச் செல்" என்று குரல் கொடுத்தார். பச்சூலால் இது யாரோ பணம் கேட்கும் பாபா, ப்ரஸாதம் கொடுத்து பணம் கேட்பார் என்று எண்ணி, கேட்டும் கேட்காதது போல் சென்றுவிட்டார்.

(தொடரும்)

## *மாலே மணிவண்ணா – 108*

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

பக்த வத்ஸல: என்பது பகவானது ஸஹஸ்ரநாமங்களுள் 736வது திருநாமம். தன் பக்தர்களின் நிறைவே தன் நிறைவு என்று ஆழ்ந்த விருப்பம் கொண்டவர். தன் பக்தர்களது நன்மையை நாடுவதில் உள்ள பரபரப்பால் வேறு எதிலும் ஈடுபாடுகள் இல்லாமல் எப்பொழுதும் அன்பர்களைப் பற்றிய சிந்தனையிலேயே மூழ்கியவர் எனலும் ஆம்.

*அடை இறந்து அவிழ்ந்த வள் இதழ்த் தாமரை –50*
*அடியும் கையும் கண்ணும் வாயும்;*

எம்பெருமானே! நின் திருவடியும், கையும், கண்களும், திருவாயும், இலைகளை அகற்றி மேலே வந்து மலர்கின்ற வளவிய இதழ்களை உடைய தாமரை மலரை ஒக்கும். தாமரை இலைகள் திருமேனிக்கு உவமையாகும். *அக்கமலத்து இலை போலும் திருமேனி அடிகளுக்கே (திருவாய்9.7:3)*

*கருமுகில் தாமரைக் காடு பூத்து (கம்ப.191)* என்பார் கம்பர். எல்லா அவயங்களும் தாமரை போல் இருத்தலின் தாமரைக்காடு என்பது பொருந்தும் அன்றோ!

*விட்டிலங்கு செஞ்சோதித் தாமரை பாதம் கைகள் கண்கள் (திருவாய் 2.7:5)* என்ற நம்மாழ்வார் பாசுரம் பரிபாடல் வரிசையை அவ்வாறே பின்பற்றி பாதம், கைகள், கண்கள் என்று அமைந்திருப்பது காண்க.

*அந்தாமத்து அன்புசெய்து அன் ஆவிசேர் அம்மானுக்கு ,*
*அந்தாம வாழ்முடி சங்கு ஆழி நூல் ஆரம் உள,*
*செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய் செங்கமலம்*
*செந்தாமரை அடிகள் செம்பொன் திருவடியே (திருவாய்.2:5:1)*

என்ற திருவாய்மொழியும் இங்கு சேவிக்க தக்கது.

*தொடியும் உந்தியும் தோள் அணி வலயமும்*
*தாளும் தோளும் எருந்தோடு பெரியை*

*மார்பும் அல்குலும் மனத்தொடு பரியை*

எம்பெருமானது திருமேனியின் பெருமையும், பருமையும் கூறித் துதிக்கிறார் இங்கே.

தொடி எனப்படும் கையில் அணிந்துள்ள கடகமும், திருஉந்தியாகிய கொப்பூழும், தோளில் அணிந்துள்ள தோள் வளையும், திருவடிகளும், திருத்தோளும், பிடரியும் மிகப் பெரியன. எம்பெருமானது உருவப் பருமைக்கேற்ப அணிகலன்களும் பெரிதாகச் சித்தரிக்கப் பெற்றன.

எம்பெருமானது மார்பும், இடைச் சுற்றும், மனத்தால் நினைத்தற்கு இயலாத பருமை உடையன. மனமும் பரியது எனலும் ஆம். பெருமானது மார்பும், இடைச் சுற்றாகிய அல்குலும் மனத்தைப் போன்று அகலம் உடையது என்பார் *பரியை* என்றார்.

*கேள்வியும் அறிவும் அறத்தோடு நுண்ணியை 55*

கேள்வி என்பது வேதம் என்னும் பொருளது. வேதம் இறைவனது வாய்மொழி ஆதலின் கேள்வியாகிய வேதம் நுட்பமானது. தத்துவங்களைத் தன்னுள் செறித்து வைத்து விளக்குதலின் மறை எனப்பெறும். சொல்லச் சொல்ல ஆழமாகச் செல்லும் நுண்பொருள்களை உடையது. கேள்வியால் நுண்ணியை நுட்பமானவான் நீ என்று வாழ்த்தினார்.

இனி, பரிமேலழகர் கூறியவாறு நின்னை வழிபடும் அன்பர் தம் குறைகளைத் தம்முள்ளே கூறியும் அதை அறிந்து கொள்ளுதலும் அவர் தன்னிடத்துக் கூறாவிடினும் அக்குறைகளைக் களைதலும் செய்தலால் கேள்வியால் நுண்ணியை நீ எனலும் ஆகும். ஞானமே வடிவான இறைவனை அறிவால் நுண்ணியன் என்றல் விரிக்க வேண்டுவதில்லை.

*அறத்தொடு நுண்ணியை* என்பது ஆழ்ந்து சிந்திப்பதற் குரியது. மேலோட்டமாகப் பார்த்தால் அறமற்றதாகத் தெரியும். நுட்பமாகப் பார்த்தால், அதுவும் அறமே என்று தோன்றும். வாலியைக் கொன்றது அறம் அன்று என்று தோன்றுகிறது. ஆராய்ந்து பார்த்தால் அறமே ஆகும் என்பதைக் கம்பர் கூற்றால் அறியலாம்.

(தொடரும்)

## அப்பாலுக்கு அப்பால் பசவேஸ்வரர் – 5

பசவர் பிறந்தபொழுது அழவில்லை. கண் திறக்கவில்லை. ஸ்வாசம் மட்டும் வந்து போய் கொண்டு இருந்தது. உயிருக்கான வேறு அடையாளம் எதுவுமே இல்லை. உடனிருந்த குடும்ப ஜோதிடர் "மிக உயர்ந்தோர்களுக்கு மட்டும் அமைவது போல குழந்தையின் ஜாதகத்தில் ஆறு கிரகங்கள் மிக அருமையாக உச்சத்தில் அமைந்திருக்கின்றன. ஆதலால் கவலை வேண்டாம்" என்று சொல்லி இருந்தார். இருப்பினும் குடும்பத்தாருக்கு கவலை விடவில்லை. மறுநாள் விடியற்காலை அனைவரும் பேசிக்கொண்டு இருக்கையில், ஈசான்ய குரு "ஹர ஹர மகாதேவா" என்ற சப்தத்துடன் கம்பீரமாக வந்து நின்றார்.

குழந்தையை பற்றிய கவலையில் மூழ்கி இருந்ததால், அழைத்தாலும் சுலபத்தில் வராத சன்யாசியான ஈசான்ய குரு, வீடு தேடி வந்திருந்தும், குருவை சம்பிரதாயமாக வணங்குவதை கூட மறந்து நின்றனர் குடும்பத்தார். அதை லட்சியம் செய்யாமல், அழையாமலே வந்து நின்றவர், மதிராஜரை பார்த்து மிகுந்த ஸ்நேகமுடன் "சிவபெருமானின் அருளால் மிக அருமையான குழந்தை பெற்றிருக்கிறாயே. நான் பார்க்கலாமா?" என்றார். சுதாரித்து கொண்டு, அவசர அவசரமாக குருவிற்கு பாதசேவை செய்து, மதிராஜர் "தாங்கள் கூறியபடியே பரமனாரின் அருளால் நல்ல குழந்தை பிறந்திருக்கிறது. தங்கள் வரவும் எங்களுக்கு மிக மிக அவசியமானது" என்று பேசியவாறே குருவை உள்ளே அழைத்து சென்றார்.

ஒருவரும் சொல்லாமலேயே ஈசான்யகுரு, குழந்தையின் அருகில் தாமாகவே ஒரு நாற்காலியை போட்டு அமர்ந்து கொண்டார். குழந்தை ஒரு மூங்கில் கூடையில் இருந்தது. உடம்பு பட்டு துணியால் மூடப்பட்டு இருந்தது. சிவந்த முகம். ஈசான்ய குரு தம் கையிலிருந்த நீர் பாத்திரத்தை அருகில் வைத்தார். தம்மிடமிருந்த விபூதியை எடுத்து, மௌனமாக பஞ்சாக்ஷரத்தை ஜபித்தார். ஜெபித்தவாறே குழந்தையின் உடல் முழுவதும் பூசினார். நெற்றியில் பூசிய உடனேயே குழந்தை

கைகளை இழுத்தது. நெஞ்சத்தில் பூசிய உடன் இறுகி இருந்த கைகள் தளர்ந்தன. கால்களில் அவர் பூசிய உடன் கண்களை விழித்து நேருக்கு நேர் குருவை பார்த்தது. சில விநாடிகள் குருவும் அமைதியாக குழந்தையை வைத்த கண் வாங்காமல் பார்த்தார். தான் கொண்டு வந்திருந்த சிறிய லிங்கத்தை அதன் கழுத்தில் கட்டினார். மறுகணம் குழந்தை சாதாரண குழந்தை போல் அழ ஆரம்பித்தது. ஈசான்ய குரு மதலாம்பிகையை பார்த்து சைகையாக "குழந்தையை எடுத்து கொள்" என்றார். எல்லோரும் ஆச்சரியமாக பார்த்தனர். அவர்கள் சந்தோஷத்தின் உச்சிக்கு சென்று விட்டனர் .

"குருநாதா, குருநாதா" என்று சொல்லியவாறு இருந்த மதிராஜர் கண்களில் நீர் நிறைந்திருந்தது. அவர் பேச முடியாமல் உணர்ச்சி வசப்பட்டு தழுதழுத்து போனார். ஈசான்யகுரு இதையும் லட்சியம் செய்யவில்லை.

அவர் மதிராஜரை தனியே அழைத்து "பசவ என்றால் ரிஷபம் என்று பொருள்படும். ரிஷபம் தர்மத்தின் அடையாளம். தர்மத்தை போதிக்க வந்த நந்திதேவர் அம்சம்தான் இங்கு உனக்கு குழந்தையாக பிறந்திருக்கிறது. ஆதலால் குழந்தைக்கு பசவர் என்று பெயர் வை. உனது அன்பிற்கு மட்டும் அவன் சொந்தம் என்று நினைத்து அவனை வளர்க்காதே. அவனது அன்பு உலகம் முழுவதிற்கும் தேவைப்படுகிறது. அவனது அவதாரத்தில் நீ ஒரு பங்கு வகிக்கிறாய். எனக்கும் அப்படித்தான். அவன் உன்னிடம் இருக்கும் வரையிலும் உனது மகிழ்ச்சி பொங்கி இருக்கும். நீ பின்னர் குழந்தையை அழைத்துக்கொண்டு என்னை பார்க்க வா. நான் சொன்னதை ஒருவரிடமும் ஒன்றும் சொல்ல தேவையில்லை. இது தேவ ரகசியம். காலக்கிரமத்தில் அவனுக்கு தேவையானதை தெய்வமே வழங்கும்" என்று புன்னகையுடனும் ஆழமுடனும் சொன்னார். மதிராஜரால் நம்ப முடியவில்லை.

மேலும் ஈசான்யகுரு "பகேவாடி வழக்கை உன் மகன் தீர்த்து விட்டான் பார்" என்றார். மதிராஜருக்கு, குரு என்ன சொல்ல வருகிறார் என்று புரியவில்லை.

(தொடரும்)

“மதுரமுரளி” மாத இதழுக்கு சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/-ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். *கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.* ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு : +91-44-24895875

* Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83
* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.

**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | ஜூலை 15, 29 - ஆகஸ்டு 13 |
| ஜூன் 28 | திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம் |
| ஜூன் 29 | ஸ்ரீபெரும்புதூர் விவேகானந்தர் பள்ளி |
| ஜூன் 30 | விட்டலாபுரம் |
| ஜூலை 3 | குரு பூர்ணிமா |
| ஆகஸ்டு 9-18 | கோகுலாஷ்டமி உற்சவம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.